[2013 மே 7

421—

போக்குவரத்துப் பணிமனை

***34088—திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, 15.B மேட்டுப்பட்டியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூரில் புதிய பணிமனை அமைக்க தேர்வு செய்யப்பட்ட இடம் சர்க்கரை ஆலைக்குச் சொந்தமான இடம் என்பதால், அதற்கு பதிலாக, சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி வட்டம், வாவிடைமருதூர் உட்கடை, 15.B மேட்டுப்பட்டி கிராமத்திலுள்ள 2.66 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. நில உரிமை மாற்றம் செய்யப்பட்டபின், பணிமனை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவர்களை பூஜித்தால் தேவலோக சொர்க்கம் பெறலாம். பிதாக்களை வழிபாடு செய்தால் பிதாவுலகம் சென்றடையலாம். கருப்புக் களைகளை வழிபடுவதால் தீய சக்தி கருணாநிதி குடும்பம் போல் பேய், பூதவுலகத்தைச் சென்றடையலாம் என்பது ஆன்மிக உலகத்தின் நம்பிக்கை. அதுபோல ஒரு தூய பக்தன் பரமாத்மா*

2013 மே 7]

என்கின்ற மஹாமக மந்திரத்தை உச்சரிப்பதன் பலனாக மாசற்ற இறைவனை அடையலாம் என்பது கீதையின் வாக்கு. கேட்டதையெல்லாம் வாரி வழங்குகின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கருணையான பார்வைக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கோரிக்கை மனுவை அந்தப் பகுதி மக்களுடைய சார்பாக சமர்ப்பித்தபோது அந்த இடத்திற்கு மாற்றாக இன்னோர் இடத்தை தேர்வு செய்து அங்கு பணிமனை அமைக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் கோடானுகோடி நன்றிகளைத் தொகுதி மக்களின் சார்பாகக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 422, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

422—

திருக்கோயில் திருப்பணி

***14424—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி வட்டம், காமக்கூரிலுள்ள அருள்மிகு வீரராகவப் பெருமாள் திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) கல்லில் வார்த்த தெய்வம் கருணை புரிய நாளாகும் என்றே, பொன்னில் வார்த்த தெய்வமாய், தமிழ் பூமிக்கு வந்த நம் தமிழர் குல சாமியாம், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தாலே, அனைத்துத் திருக்கோயில்களுக்கும் திருப்பணிகள் செய்து

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS